தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

**அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

(27.12.2023 முதல் 31.12.2023)

அறிக்கைஎண்: 103/2023 தேதி : 26.12.2023

**அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 28 - 31 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 23 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கா மழை பெறப்பட்டது.

**அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (27.12.2023 முதல் 31.12.2023).**

| கடந்தவாரவானிலை (22.12.2023 முதல் 25.12.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (27.12.2023 முதல் 31.12.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 22/12 | நாள்-2 23/12 | நாள்-3 24/12 | நாள்-4 25/12 | தேதி | நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | நாள்-4 30/12 | நாள்-5 31/12 |
| 0.6 | 0.0 | 0.0 | 3.3 | மழை (மி.மீ.) | 0 | 1 | 3 | 3 | 0 |
| 28 | 31 | 31 | 30 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 30 | 31 | 30 | 29 | 29 |
| 22 | 21 | 22 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 22 | 22 | 21 |
| 5 | 5 | 7 | 6 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 7 | 8 | 8 | 6 |
| 79-62 | 72-54 | 75-77 | 87-75 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-60 | 80-70 | 90-70 | 90-60 | 80-60 |
| 11 | 13 | 11 | 10 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 16 | 16 | 16 | 20 | 18 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு |

**அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 28.12.2023 முதல் 30.12.2023 லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29 – 31 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 23 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 16 – 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல்<br>. | நடவு வயல்<br>. | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், மழை நின்ற பின் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50% SP @400 கிராம் அல்லது புளுபென்டிமைட் 20 % WG @ 50 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| வாழை | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | இரவில் குளிர்ந்த வெப்பநிலை நிலவுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.

.

**இயக்குநர்**